பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
நாதன் சகோதரர்
உரிமையாளர்:
ஸ்ரீராமச்சந்திரன்
கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
லாலாசோப் அச்சுவேலி

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை03 சனிக்கிழமை (18-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 334

### யாழ் போதனா வைத்தியசாலையில்
## இறந்தவரின் இரண்டு கண்களும் ஒப்புதலின்றி எடுக்கப்பட்டன
### 80,000ரூபாவுக்கு விலைபோனதா?

யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் இறந்த நோயாளிஒருவரின் இரு கண்களும் ஒப்புதலின்றி அகற்றப்பட்ட சம்பவம் நேற்று பெரும் சர்ச்சையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. இதனால் நேற்று முழுவதும் யாழ் போதனா வைத்தியசாலை எங்கும் கண் அகற்றப்பட்ட சம்பவம் பற்றி பரவலான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தாவடிப் பிள்ளையார் கோவிலடியைச் (8ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர்கள் பாடம் புகட்டியுள்ளனர்
### விடுதலைப் புலிகள் அறிக்கை

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாழும் முஸ்லிம் இளைஞர்களை படையில் சேருமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டபோது முஸ்லிம் சகோதரர்கள் இது குறித்து அலட்டிக்கொள்ளாததன் மூலம் படையினருக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளனர்.

இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் முஸ்லிம் இளைஞர்கள் தற்காலத்தை நன்கு உணர்ந்து கொண்டுள்ளனரென்றும் அவர்கள் அரசியல் குருடர்களல்லர் என்பதை படையினர்நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ★ மூன்று படிமுறைகளின் அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் சேர்ந்ததீர்வு அவசியம்!

### செய்தியாளர் மத்தியில்அமைச்சர் டக்ளஸ்

(நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்று படிமுறைகளை ஈ.பி.டி.பி முன் வைத்துள்ளது இம் மூன்று படிமுறைகளும் சரிவர நிறைவேற்றப்படுமானால் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியும்-

★ வடக்கு கிழக்கில் அரசியல் தலைமைத்துவம் ஒன்றை வளர்த்தெடுக்க வேண்டும்- அதனை இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் உருவாக்கலாம்- அல்லது, தேர்தல் வைப்பதன் மூலம் ஏற்படுத்தலாம்- ஆனால் எமது கட்சி தேர்தல் வைப்பதையே விரும்புகிறது-

★ இனப்பிரச்சினைக்கான தீர்வில் வடக்குகிழக்கில்தமிழ்,முஸ்லிம் மக்களிடையே நம்பிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

★ விடுதலைப்புலிகளுடன் இணைந்து இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டும்-

வடபகுதி அபிவிருத்தி, புனர் வாழ்வுவடக்குக்கிழக்கு தமிழ்விவகார அமைச்சரும், ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமுமானடக்ளஸ் தேவானந்தா பத்திரிகையாளர் மாநாடொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடபகுதி அபிவிருத்தி, புனர் வாழ்வு அமைச்சில் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் பத்திரிகையாளர்களின் சரமாரியான கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேலும் தெரிவித்திருப்பதாவது;

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் தமிழ் பேசும் மக்கள் வன்முறைக்கெதிராக வாக்களித்துள்ளனர் என்பதையும், இனப்பிரச்சினைக்கு கௌரவமான முறையில் தீர்வுகாணப்பட (8ம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் கிரனேட்வீச்சு பெண் ஒருவர் காயம்

நல்லூர் கந்தசுவாமிகோவிலடியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சு சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிரனேட் வீச்சில் காயமடைந்தவர் நவரட்ணர்ாஜா சறோஜினிதேவி (வயது-54) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

நேற்று நண்பகல் 2 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள பால் சாலைக்கு அண்மையில் இக்கிரனேட் வீச்சுச் சம்பவம் நடைபெற்றதாகவும், இதன் போது இராணுவத்தினரில் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-12)

## இன்று விமானசேவை

(யாழ்ப்பாணம்)

பயணிகளுக்கான விமான சேவை இன்று நடைபெறும் என யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது. இரண்டாவது விமானத்தில் பயணம் செய்வதற்காக பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை [8 ஆம் பக்கம் பார்க்க)

### 1லீ.மண்எண்ணை 20ரூபா45சதம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் மண்ணெண்ணையினதும், டீசலினதும் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் சில்லறை விலை 20 ரூபா 45 சதமாகவும் ஒரு லீற்றர் டீசலின் சில்லறை விலை 29 ரூபா 85சதமாகவும் விற்கப்படுமெனவடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது. (வ)

## பிந்துனுவெவ படுகொலை 30 பேர் தலைமறைவு

பிந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து 30 கிராம வாசிகள் தலைமறைவாகியுள்ளனர்.

புனர்வாழ்வு முகாம் சம்பவம் பற்றி இரகசியப் பொலிஸாரும், விசாரணைக் குழுவினரும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதையடுத்தே முகாம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையிலுள்ள இக்கிராம வாசிகள் தலைமறைவாகியுள்ளனர்.

இவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் சி.ஐ.டி யினரும் பொலிஸாரும் ஈடுபட்டு வருகின்றனர். (ஸ்ரீ)

## கொழும்பில் "வயக்ரா" பலருக்குக்கொண்டாட்டம்

கொழும்பிலுள்ள 'ஒசுசல'' அரசமருந்துக் கூட்டுத் தாபனத்தில் ''வயக்ரா'' மாத்திரைகள் விற்பனைக்கு வந்துள்ளது. இருபத்தைந்து மில்லிக்கிராம் மாத்திரை ஒன்று 685 ரூபாவாகவும், ஐம்பது மில்லிக்கிராம் மாத்திரை 800 ரூபாவாகவும் ஒசுசலவில் விற்பனை செய்யப்படுகிறது. (8ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு மீண்டும் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளது.

இராணுவத்தில் சேர விரும்புவோர் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை எந்த ஒரு இரா (8-ம்பக்கம் பார்க்க.)

## தீவக பயணிகள் அனுமதி "றான்" அலுவலகத்தில்

(யாழ்ப்பாணம்)

தீவகப்ப குதியைச் சேர்ந்த பொதுமக்கள் தமது பயண அனுமதி தொடர்பான விபரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 2மணிமுதல்மாலை 4 மணிவரை ''றான்'' அலுவலகத்தில் பார்வையிடலாம் என அந்த அமைப்பின் இணைப்பாளர் எஸ். குகராஜன் தெரிவித்தார்.

பயண அனுமதிகளைப் பார்வையிட வருபவர்களும் மற்றும் அனுமதிப்பத்திரம் பெறவருவோரும் வீதியில் நின்று போக்குவரத்துக்கு (8ஆம் பக்கம் பாக்க)

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல புத்தகசாலை ஒன்றுக்கு கணக்காளர், வில்போடுபவர்கள், விற்பனையாளர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு விளம்பர இலக்கம் 1040 மே/பா வலம்புரி யாழ்ப்பாணம். (கி-1040)

## சனசமூக நிலையம் புனர்நிர்மாணம்

(கரணவாய்)

கரணவாய் மேற்கு வல்லியாவத்தை திருமகள் சனசமூக நிலையம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இச்சனசமூக நிலையப் புனரமைப்பிற்கென ஒருகுறிப்பிட்ட தொகையைச் சாவகச்சேரி தெற்கு மேற்கு பிரதேசசபை ஒதுக்கியுள்ளது.

* * *

உடுப்பிட்டி நாவலடி நாவலர் சனசமூக நிலைய பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு புதிதாக கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது.

இக்கட்டிட வேலைக்காக கரவெட்டி தெற்கு மேற்குப் பிரதேசசபை சுமார் இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் கி. இராசா தெரிவித்துள்ளார். (செ 27)

## பரிசளிப்பு விழா

(வட்டுக்கோட்டை)

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு கலாநிதிசி.க. சிற்றம்பலம், வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் திரிலோகநாதன் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக்கலந்து கொள்கிறார்கள். (செ-24

## யுனிசெவ் நிதி ஒதுக்கீடு

(மானிப்பாய்)

யுனிசெவ் நிறுவனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொதுஸ்தாபனங்களுக்கு 13 புதிய மலசல கூடங்கள் அமைப்பதற்கும் 12 மலசல கூடங்களை திருத்தி அமைப்பதற்குமென சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை இந் நிறுவனத்தின் நிதி மூலம் 25 குளியலறை மறைவிடங்களுக்கான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (க-120)

## செயற்குழுக் கூட்டம்

(பந்திகை)

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயற் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு, சங்கத்தலைவர் மா. நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-23)

## இன்று பேச்சுப் போட்டி

(நல்லூர்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய, திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமு நாவலர் குருபூசையை முன்னிட்டு, இன்று 18 ஆம் திகதி சனிக்கிழமை நாவலர் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி என்பன இணுவிலில் நடைபெறவுள்ளன. (க-103)

## 50வது ஆண்டுவிழாவும் திறப்பு விழாவும்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்குசனசமூக நிலையத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவும், கட்டடத் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப 3 00மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத்தலைவர் இரா.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜா கலந்து கொள்கிறார். (செ-82)

# சட்ட விரோத மின் பாவனை தடுத்து நிறுத்தப்படவேண்டும்

## இலங்கை மின்சார சபையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மின்சாரம் பெறுவோர்தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இத்தகைய அத்து மீறல் செயற்பாட்டினால் சட்ட பூர்வமாக மின் இணைப்பு பெற்றவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள் இச் செயல் உடன் தடுக்கப்படவேண்டும்.

சட்டவிரோதமின்பாவனையாளர் விடயம் தொடர்பாக இலங்கை மின்சார சபையினர் விடுத்த வேண்டுகோளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தற்போதைய நாட்டு நிலையில் மின்சார சபையினர் இரவில் நடமாடி மேற்படி விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த முடியாதுள்ளது.

எனினும் எமது சக்திக்குட்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் நாம்மேற்கொண்டு வருகிறோம்

எனினும் சட்ட விரோத மின் பாவனையாளர் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிய வண்ணமே உள்ளது.

இதுவிடயத்தில் சட்ட ரீதியாக மின்சாரம் பெறுவோர் ஒன்று சேர்ந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தேவையானால் பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

வெறுமனே எம்மிடம் முறையிடுவதால் மட்டும் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

ஒருசிலரின் இத்தகைய நடவடிக்கையில் முழுச் சமூகமுமே மின்சாரம் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நல்.பிரதேச அனைத்துப் பகுதிகளும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு பாரபட்சமின்றி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென மேற்படி பிரதேச சபையின் தலைவர் க. மணிபல்லவராஜன் (நிசாந்தன்) தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேசசபையின் கேட்போர் கூடத்தில் நடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலிற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்:

கோவில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் முன்பள்ளிகள் போன்றவற்றிற்கு நிச்சயம் முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் கோண்டாவிலில்உள்ள அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்தி குறித்து ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

தமது இம்முயற்சியில் பொது அமைப்பினர் பலரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இப்பகுதி ஆலய நிர்வாகிகள், சனசமூக நிலைய பிரதிநிதிகள், விளையாட்டுக்கழக பிரதிநிதிகள் உட்பட பலர் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பயணஅனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 141939 ஏ | 150537 ஏ |
| 150537 பி | 150537 சி |
| 157961 ஏ | 161765 ஏ |
| 161766 ஏ | 161766 பி |
| 161766 சி | 161766 டி |
| 161766 ஈ | 161766 எப் |
| 163982 ஏ | 163982 பி |
| 163982 சி | 165645 ஏ |
| 165936 ஏ | 165936 பி |
| 165936 சி | 165936 டி |
| 165936 ஈ | 166890 ஏ |
| 166890 பி | 166890 சி |
| 169051 ஏ | 169051 பி |
| 169084 ஏ | 169128 ஏ |
| 169128 பி | 169178 ஏ |
| 169178 பி | 169204 ஏ |
| 69224 ஏ | 169225 ஏ |
| 169254 ஏ | 169343 ஏ |
| 169352 ஏ | 169352 பி |
| 169975 ஏ | 170026 ஏ |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 169939 ஏ | 169939 பி |
| 169939 சி | 169939 டி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 130151 ஏ | 130151 பி |
| 132031 ஏ | 132031 பி |
| 144520 ஏ | 144520 பி |
| 144520 சி | 144520 டி |
| 144657 ஏ | 156565 ஏ |
| 156565 பி | 156565 சி |
| 159464 ஏ | 159464 பி |
| 160975 ஏ | 160975 பி |
| 161069 ஏ | 161404 ஏ |
| 161404 பி | 161404 சி |
| 161404 டி | 163221 ஏ |
| 163221 பி | 163257 ஏ |
| 163257 பி | 163283 ஏ |
| 163283 பி | 163283 சி |
| 163332 ஏ | 166027 ஏ |
| 166027 பி | 166027 சி |
| 166063 ஏ | 166186 ஏ |
| 166186 பி | 166341 ஏ |
| 166363 பி | 166396 ஏ |
| 167712 ஏ | 167712 பி |
| 167712 சி | 168315 ஏ |
| 168315 பி | 168315 சி |
| 16 453 ஏ | 168453 பி |
| 168453 சி | 168453 டி |
| 168465 ஏ | 168465 பி |
| 168465 சி | 168465 டி |
| 168481 ஏ | 168536 ஏ |
| 168536 பி | 168538 ஏ |
| 168538 பி | 168558 [illegible] |
| 168559 ஏ | 168559 பி |
| 168559 சி | 168559 டி |
| 168588 ஏ | 168588 பி |
| 168588 சி | 168680 ஏ |
| 168714 ஏ | 168714 பி |
| 168721 ஏ | 168737 ஏ |
| 168745 ஏ | 168755 ஏ |
| 168755 பி | 168755 சி |
| 168768 ஏ | 168768 பி |
| 168829 ஏ | 168835 ஏ |
| 168835 பி | 168835 சி |
| 168850 ஏ | 168851 ஏ |
| 168859 ஏ | 168875 ஏ |
| 168875 பி | 168875 சி |
| 168894 ஏ | 168894 பி |
| | 168903 ஏ |
| 168921 ஏ | 168921 பி |
| 168922 ஏ | 168922 பி |
| 168934 ஏ | 168934 பி |
| 168934 சி | 168946 [illegible] |
| 171651 ஏ | 171675 ஏ |
| 171675 பி | 171675 சி |
| 171675 டி | 171675 ஈ |
| 171675 எப் | 171718 ஏ |
| 171719 ஏ | 171719 பி |
| 171829 ஏ | 171829 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 156827 ஏ | 156827 பி |
| 156827 சி | 156827 டி |
| 156827 ஈ | 157400 ஏ |
| 157400 பி | 157400 சி |
| 162542 ஏ | 162542 பி |
| 162644 ஏ | 162644 பி |
| 162761 ஏ | 162761 பி |
| 162761 சி | 162761 டி |
| 162761 ஈ | 162761 எப் |
| 162964 ஏ | 162964 பி |
| 162964 சி | 163658 ஏ |
| 163658 பி | 163720 ஏ |
| 166969 ஏ | 167066 ஏ |
| 167066 பி | 167066 சி |
| 167069 ஏ | 167114 ஏ |
| 167114 பி | 167114 சி |
| 167124 ஏ | 167124 பி |
| 167127 ஏ | 167127 பி |
| 167127 சி | 167127 டி |
| 167137 ஏ | 167137 பி |
| 167519 ஏ | 167519 பி |
| 167545 ஏ | 167550 ஏ |
| 167550 பி | 167595 ஏ |
| 167595 பி | 167595 சி |
| 167602 ஏ | 167602 பி |
| 167635 ஏ | 167635 பி |
| 167662 ஏ | 167662 பி |
| 167711 ஏ | 167711 பி |
| 167711 சி | 167718 ஏ |
| 167718 பி | 167730 ஏ |
| 167730 பி | 167730 சி |
| 167732 ஏ | 167732 பி |
| 167735 ஏ | 168202 ஏ |
| 170605 ஏ | 170605 பி |
| 170617 ஏ | 170618 ஏ |
| | 163453 ஏ |
| 163453 பி | 163453 சி |
| 168733 ஏ | 168733 பி |
| 168733 சி | |

(தொடரும்)

## சதுரங்க போட்டி

யாழ். மாவட்ட சதுரங்க அணித்தேர்விற்காக, யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் போட்டிகளில் முதற் போட்டியின் இறுதி நாள் ஆட்டங்கள் இன்று காலை 9. 00 மணிக்கும், இரண்டாவது போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும், யாழ். இந்துக் கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## வாகனம் கடத்தல்

மட்டக்களப்பு கல்லடியில் உள்ள நிர்மாணத்திணைக்களத்திற்குச்சொந்தமான பிக்கப் வாகனம் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரிவுத் துயர் பகிர்வு

### கணபதிப்பிள்ளை மரியாம்பிள்ளை.

குடத்தனையை வசிப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை மரியாம்பிள்ளை 9. 11. 2000 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18. 11. 2000) இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பொற்பதி குடத்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: தேவரெட்ணம் (மருமகன்)

### திருமதி.வைத்தி எஸ்தாக்கி மரியப்பிள்ளை.

சக்கோட்டை அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்தி எஸ்தாக்கி மரியப்பிள்ளை 16. 11. 2000 அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று புனித சவேரியார் சேமக்காலையில் நடைபெற்றது.

தகவல்: அல்பிரட் (மகன்)

### திருமதி.விஜயலட்சுமி நவரத்தினம்.

இளவாலையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி நவரத்தினம் 14. 11. 2000 அன்று வவுனியாவில் காலமானார்.

தகனக்கிரியைகள் 15. 11. 2000 அன்று வவுனியாவில் நடைபெற்றது.

தகவல்: ந. முகுந்தன் (மகன்)

### விசுவலிங்கம் பஞ்சாட்சரம்

இணுவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பஞ்சாட்சரம் 16. 11. 2000 அன்று காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 17. 11. 2000 அன்று நடைபெற்றது.

தகவல்: குடும்பத்தினர்

### குணரத்தினம் செல்லத்துரை.

(பிரபல ஆயுர்வேத வைத்தியார், சுளனாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை ஓய்வு பெற்ற அதிபர்.)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த குணரத்தினம் செல்லத்துரை 15. 11. 2000 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: செ பொன்னம்மா (மனைவி)

# செய்தித் துளிகள்

## நாவலர் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 121 வது குருபூசை விழா நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்து சமய பேரவை துணைத் தலைவர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. சமலநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவர்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை மற்றும் கவிமணி சி. விநாசித்தம்பியின் தொடக்கவுரையும் இடம் பெறும்.

பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் வித்துவான் க. சொக்கலிங்கம் கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

கவிதைப் போட்டியில் வெற்றி ஈட்டியோருக்கு விருதுகள் வழங்கப்படும். (க

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினம் நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், துர்க்காபுரம்மகளிர் இல்லப் பிள்ளைகளின் பண்ணிசை, பேச்சுப் போட்டி என்பனவும், செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் சிறப்புச் சொற் பொழிவும் இடம்பெறவுள்ளது:

நன்றியுரையைத்தொடர்ந்து நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம் பெறவுள்ளது. (செ)

## குருபூசையும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக் கோட்டத்தின் ஏற்பாட்டில் சைவத்திருமுறை விழாவும், ஆறுமுகநாவலர் குருபூசையும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப் பாளர் அ. தற்பரானந்தன் இந்நிகழ்விற்குத் தலைமை தாங்குகிறார். (செ)

## விரிவுரைகள் நாளை ஆரம்பம்

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்படும் மத்தியஸ்தர் பரீட்சைக்கான பயிற்சி விரிவுரை வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற உள்ளதாக, சுப்டன் குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி விரிவுரைகள் கிளிபேட் அன்ரனிப்பிள்ளையால் நடத்தப்படும் என்றும் மத்தியஸ்தர் பரீட்சை டிசம்பர் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார், (க-110)

## மணவாளக்கோலமும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் அருள்மிகுபரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும்22ஆம் திகதி புதன் கிழமை மணவாளக் கோல விழாவும் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

கடந்த 12 ஆம் திகதிமுதல் தொடர்ந்து 10 நாட்கள் விஷேட அபிஷேகங்கள் பூசைகள் என்பன இங்கு இடம் பெற்று வருகின்றன. (செ)

## காவலரண் மீது மரக்கிளை வீழ்ந்தது

(ஈச்சமோட்டை)

யாழ் நாவலர் வீதியும் யாழ். வீதியும் சந்திக்கும் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் மீது அரசமர மொன்றின் பாரிய கிளை முறிந்து வீழ்ந்துள்ளது.

இப்பாரியகிளைகாவலரண் மீது வீழ்ந்த போதும் அதனுள் இருந்தவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. (சு-59)

## பொருட் காட்சி

[யாழ்ப்பாணம்]

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவும், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்தும், அடிப்படை மனையியற் பயிற்சி பொருட்காட்சியும் விற்பனையும் இன்றும் நாளையும் நடைபெறும்.

இவ்விழா மகளிர் குழுத் தலைவி வ. பத்தினிப்பிள்ளையின்தலைமையில்கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக போரூட் உதவித் திட்ட இணைப்பாளர் கலந்து கொள்வார். (க-2)

## கைச்சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கே. கே. எஸ். வீதியில் துரை வீதிக்கும் இணுவில் சந்திக்கும் இடையில் கடந்த 11ம் திகதி அன்றுகைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு மஞ்சத்தடி கிராம சேவையாளர் (J/115) க முருகையாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார். (ச)

## விஞ்ஞான பீடாதிபதி வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான கற்கைநெறி 2000 / 2001 ம் ஆண்டிற்கான வெற்றிடம் நிரப்பு பட்டியல் 1ல் தெரிவாகிய 28 பேரின் பெயர் விபரத்தினை, விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனத்தெரிவிக்கப்படுகின்றது. [செ]

## பேச்சுப் போட்டி

[இணுவில்]

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூஜையை முன்னிட்டு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் திருநெறிய தமிழ் மறைக்கழகத்தால் நடத்தப்படும் பேச்சுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [செ-49]

# யாழ். குடாநாட்டில் தொடரும் யுத்த நெருக்கடியால் தொழில் வாய்ப்புகள் குறைகின்றன

## கொழும்பிற்கு அவசர மகஜர்

[தென்மராட்சி]

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவி வருகின்ற பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாக தொழில் வாய்ப்புகள் இல்லாமல் இருக்கின்றன. அதன் பொருட்டு இடம் பெயர்ந்த மக்கள் தங்களது ஜீவனோபாயம்தொடர்பான பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அதே வேளையில் அரசாங்கமும் சர்வதேச முகவர் அமைப்புகளும் நாதியற்ற இத்தகையமக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய உண்மையான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தாமல் இருந்து வருகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் கொழும்பிலுள்ள மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்டோபர் மாதத்துக்கான நிலவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இணையத்தின் கௌரவ செயலாளரான எம். எவ். இராஜேந்திரத்தினால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளஅந்நிலவர அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

### சுற்றுச் சூழல்

காவலரண்கள் அமைப்பதற்காக பனை, தென்னை மரங்கள் கண்டபடி பாதுகாப்புப் படையினரால் வெட்டப்பட்டுள்ளன. சுற்றுச் சூழல் விடயத்தில் இது பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் சமுதாயத்தில் ஒரு பகுதியினரின் வருமானம் பெறும் முயற்சியும் பெரும் சங்கடமாகியுள்ளது.

### சட்டமும் ஒழுங்கும்

குடாநாட்டில் கொள்ளைகள், திருட்டுக்கள், கசிப்பு உற்பத்தி விற்பனை மற்றும் சட்டவிரோத மினி சினிமாக்கள் அதிகரித்து வருகின்றன குற்றவாளிகளும் சமூக விரோதிகளும் தம்மிஷ்டம் போல் செயற்பட்டு வருகின்றனர். சட்டத்தினை மதித்து நடக்கும் பிரஜைகளுக்கு சட்ட வலுவின்மை தொல்லை தரும் பிரச்சினையாகஇருக்கின்றது இத்தகைய நிலை பற்றி சட்டத்தினை அமுல் செய்வோர் எவ்விதமான அக்கறையும் இல்லாமல் இருப்பது கவலை கொள்ளத்தக்கதாகவுள்ளது.

### அத்தியாவசியப் பொருட்கள்

சீனியின் விலை கிலோ 45 ரூபாவாக உயர்ந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தின் பின் கூட்டுறவுச் சங்கங்களில் சீனி குடும்ப அட்டைக்கு வழங்கப் படவில்லை. சந்தையில்மீனின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. மீன் பிடித்தலுக்கு எதிராக அடிக்கடி அறிமுகப்படுத்தும் தடைகள் காரணமாக மீனின் விலை அதிகரித்துள்ளது. சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துக்காணப்படுகின்றது.

### கப்பல் போக்குவரத்து

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்துத் தடைகள் இன்னமும் நீங்கவில்லை. 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவை வாரத்தில் இரு தடவை மட்டுமே இடம் பெறுகின்றது. வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெறப்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கின்றனர்.

### சுகாதாரம்

சுகாதார நிலமை திருப்திகரமாக இருக்கவில்லை. சுகாதார நிலைப்பாடு மேன்மைப் படுத்தப்படல் வேண்டும் எனப் பல தடவைகள் எடுத்துக்கூறப்பட்ட போதிலும் கூட அந்த நிலைப்பாடு முன்னேற்றமடையவில்லை. குடாநாட்டுக்குத் தேவையான காலாண்டுக்கான மருந்துத் தேவையை உரியநேரத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும் எனக்கூறப்பட்டும் கூட அது நடைமுறையில் இடம் பெறவில்லை.

### நிவாரணம்

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களால் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது. தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தில் இருந்து அக்டோபர் மாத முற்பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் திருப்திகரமான முறையில் கவனிக்கப் படவில்லை. இத்தகைய மக்களுக்கு தேர்தலுக்கு முன் அரசியல் கட்சிகளால் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால்தேர்தல்முடிந்ததும் உரிய கட்சியில் இருந்து அரசியல் கட்சிகள் காணாமல் போய்விட்டன.

### குடியிருப்புத்திட்டம்

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான குடியிருப்புத் திட்டங்கள் அமைக்கப்படும் போது இலக்குக் குடும்பங்களின் முழுமையான பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் என, குறித்த திட்டத்திற்கு நிதியுதவி அளித்த நிறுவனங்களுக்கு திட்டம் செயல்படுத்தும் அமைப்புகள் அறிவித்திருந்தன. ஆயினும் நடைமுறையில் வேறுவிதமாகவே இருந்துள்ளது. குடியிருப்புத் திட்டங்கள் அமைப்பதற்கான சரியான இடங்கள் தெரிவுசெய்யப்படவில்லை. குடியிருப்புகள் அமைத்தலின் தரம் திருப்திகரமாக இருக்கவில்லை நிர்மாணப்பணிகள் பதரப்பட்ட ஒப்பந்தகாரர்களாலேயே செய்யப்பட்டன குடியிருப்புகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள்பற்றி திட்டப் பயனாளிகளால் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் கூட அவை திருத்தப்படவில்லை இதன் காரணமாக திட்டப்பயனாளிகள் மிகவும் விரக்தியடைந்த நிலையில் யாரிடம் முறையிடுவது எனத் தெரியாத நிலையில் உள்ளனர்.

மழைநீர் தேங்கிநிற்றல்; வீட்டுக் கூரைகள் ஒழுகுதல், பக்கவாட்டுச் சுவர்கள் இடிந்து வீழ்தல் போன்ற பொதுவான குறைபாடுகள் நிலவிவருகின்றன. ஆயினும் இவை திருத்தம் செய்யப்படவில்லை.

### பத்திரிகையாளர் நிமலராஜன்

இளம் பத்திரிகையாளரும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளருமான மயில்வாகனம் நிமலராஜன் அக்டோபர் மாதம் 19ஆம் திகதி கொலை செய்யப்பட்டுள்ளார். மும்மொழிகளிலும் ஆற்றல் கொண்டிருந்த நிமலராஜன் பி பி சி தமிழ்/சிங்கள சேவைகளுக்கும், வேறும் பலசெய்தி ஊடகங்களுக்கும் செய்திகளை வழங்கிவந்துள்ளார். இவரது படுகொலையானது ஏனைய பத்திரிகையாளர்களுக்கும் ஒரு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. கொலைகாரர்களைக் கண்டுபிடிக்கும் பொலிஸாரின் முயற்சி இன்னமும் பலனளிக்கவில்லை என அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (க-77)

## இராசி பலன்

18-11-2000
(கார்த்திகை 3, சனி)
சப்தமி பி.ப 1 35 வரை
ஆயிலியம் மு.இ 8:04 வரை
ராகுகாலம் 9 09- 10 39
சுபநேரம் 3.09- 4.39

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, வியாதி, நம்பிக்கைக் குறை, பயந்த சுபாவம்.

**இடபம்**
காரியம் கைகூடும், பிரயாணம், இனிய சம்பவம், குடும்பசுகம்.

**மிதுனம்**
வாக்குக் கலகம், தனவிரயம், காரியத் தாமதம், கௌரவக் குறை.

**கடகம்**
ஆத்மீக சிந்தனை, ஆரோக்கியம், காரியம் கைகூடும், சயன சுகம்.

**சிங்கம்**
பிரயாணம், தனவிரயம், கலகம், வியாதி.

**கன்னி**
சந்தோசமான சம்பவம், தனவரவு, நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை.

**துலாம்**
தொழில் மேன்மை, முயற்சி ஜெயம், அதிகாரம், துயரம்.

**விருச்சிகம்**
வியாதி, பிரயாணம், அச்சமான நிலை, கட்டுப்படுதல், வயிற்றுக் கோளாறு.

**தனுசு**
கடன்பழு, வியாதி, பிரயாணம், அபகீர்த்தி.

**மகரம்**
சஎஸ்திர சுகம், பிரயாணம், வாகன வசதி, காரிய நன்மை.

**கும்பம்**
நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், மனமகிழ்வு, முயற்சி பலிதம்.

**மீனம்**
தாழ்வு நிலை, வியாதி, பிரயாண இடையூறு, நிலை மாற்றம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## ஜனாதிபதி பில் கிளிங்டன் வட வியட்நாம் பயணம்

(ஹனோய்)

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் வடவியட்நாமிற்கு அரச முறைப் பயணமாகச் சென்றுள்ளார்.

தனது மகளுடன் மூன்று நாள் பயணமாக சென்றுள்ள கிளிங்டன் பல நிகழ்வுகளில் கலந்துகொள்ள இருக்கிறார்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஜயத்தில் ஹனோய் பல்கலைக்கழகத்தில் தமது விஜயத்தின் நோக்கங்கள் பற்றிய உரையை நிகழ்த்த இருக்கிறார்.

வர்த்தகம் மனித உரிமைகள் பற்றிய முக்கிய நோக்கங் கொண்டு சென்றுள்ள பில் கிளிங்டன் இரு நாடுகளுக்கிடையேயுள்ள சுருத்தொற்றுமை பற்றியும் முரண்பாடுகள் பற்றியும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட இருக்கிறார் என்று அமெரிக்க வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் சைவ பரிபாலன சபையினரின்

# பேச்சுப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 121வது குருபூசையை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபையினரால் கடந்த 19-ம் திகதி நடத்தப்பட்ட நாவன்மை போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெறுவோர் விபரம்;

**நாவன்மை கீழ்ப்பிரிவு**

செல்வி க. கலையரசி யா-புனித திரேசாள் மகளிர் கல்லூரி, செல்வி வை. மீரா யா-கொக்குவில் இந்துக்கல்லூரி, செல்வி ம. லோகபரணி யா-மகாஜனக் கல்லூரி.

**மத்திய பிரிவு**

செல்வன ம. அன்பரசன் யாழ். இந்துக் கல்லூரி, செல்வி க. கலையரசி யா-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, செல்வி இ. சோபனா யா-மாதகல் சென்யோசப் ம. வி.

**மேற் பிரிவு**

செல்வி ப. சசிகலா யா-கொக்குவில் இந்துக் கல்லூரி, செல்வன் இ. சர்வேஸ்வரா யா-இந்துக் கல்லூரி, செல்வி இ. சிவஜோதி யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

இப்பரிசுகளை மேற்படி குருபூசையன்று மு. ப. 10 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பிரதம விருந்தினர் முன்னாள் இந்துக் கல்லூரிப் பிரதி அதிபரான க. சிவராமலிங்கம் வழங்குவார். 21 மாணவருக்கு ஆறுதல் பரிசு வழங்கப்படும்.

**கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர்.**

செல்விகிரிசாம்பாள் வேலாயுதபிள்ளை யா-வேம்படி மகளிர்கல்லூரி முதலாம் பரிசு.

செல்வன் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா யா-இந்துக் கல்லூரி இரண்டாம் பரிசு.

செல்வி ஜெயகௌரி ஜெயரட்ணம் யா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாம் பரிசு.

10 மாணவர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்படும்.

# 2001ம் ஆண்டுமுதல் பல்கலைக்கழகங்களில் கணனி, முகாமைத்துவம், ஆங்கில பட்டங்கள் கட்டாயபாடமாக்கப்படும்

(கொழும்பு)

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள பல்கலைக்கழக புதிய கல்விச்சீர்திருத்தத்திற்கமைய கணனி அறிவு, முகாமைத்துவ கல்வி, ஆங்கிலம் ஆகியவை கட்டாயபாடமாக்கப்பட்டிருப்பதாக கல்வி உயர்கல்வி அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி செயலணிக் குழுவினரால் திட்டமிடப்பட்டுள்ள பல்கலைக்கழக கல்விச் சீர்திருத்தம் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ள ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

புதிய கல்விச்சீர்திருத்தத்திற்கமைய நாட்டின் சகல பல்கலைக்கழகங்களும் புதிய கல்வி ஆண்டு ஒரே காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு வருடத்திலும் ஒக்ரோபர் மாதத்தில் புதிய கல்வியாண்டு ஆரம்பமாகி அடுத்தவருடம் ஜுலை மாதத்தில் அது பூர்த்தியாகும்.

இருப்பினும், இப்புதிய நடைமுறை 2002 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த பல்கலைக்கழகங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

பல்கலைக்கழக அனுமதியில் துரித திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் இப்புதிய சீர்திருத்தம் வழிவகை செய்துள்ளது.

2002ஆம் ஆண்டுஏப்பிரலில் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத்தராதர பரீட்சையின் சிறந்த பெறுபேறுகளடிப்படையில் அதே ஆண்டு ஒக்ரோபர் மாதமே புதிய கல்வியாண்டு ஆரம்பமாகும்.

சீர்திருத்தத்தின் கீழ் மேற்கூறப்பட்ட 3 கட்டாயபாடங்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் புதிய கற்கை நெறிகளும் இணைக்கப்படவுள்ளது.

(உ)

# முழங்காவில் வாசிகள் கடற்படையினரிடம் சரண்

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற முழங்காவில் பகுதியில் இருந்து இரு படகுகளில் சென்ற 7 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பேசாலை கடற்படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று முழங்காவில் பகுதியில் இருந்து, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்ட இரு படகுகளில், நாச்சிக்குடா வழியாகச் சென்ற 31 பேரே இவ்வாறு திங்கட்கிழமை கடற்படையினரிடம் சரணடைந்தவர்களாவர்.

கடற்படையினரால் மன்னார் நாசகார ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் 31 பேரும், செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாகவும் தற்போது பேசாலை திறந்த அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை இவர்கள் இந்தியா நோக்கிப்புறப்பட்ட சமயம் இவ்வாறு கடற்படையினரிடம் சிக்கியிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

(உ)

# வலுவான வாய்த் தர்க்கம் விரிசலடையும் உறவுகள்

## நெல்லியடியில் சம்பவம்

(அன்னாலை)

கரவெட்டி - நெல்லியடிப் பொதுச்சந்தையில் நிலையாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு; தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து இச்சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கும் இடையில் பலத்த முரண்பாடுகள் நிலவுகின்றது.

மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்வதிலும் விற்பனவு செய்வதிலும் இவர்களுக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்படுகின்றது.

குறிப்பாக பெண்வியாபாரிகள், ஆண் வியாபாரிகளை தாறுமாறாக ஏசுகின்றார்கள்.

இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கின்ற நிலையில் இவ்வாறான முரண்பாடுகள் வியாபாரிகள் மத்தியில் ஏற்படுவது குறித்து பொது மக்கள் தரப்பில் பலத்த விசனம் தெரிவிக்கப் படுகின்றது. (செ-41)

# பாதுகாப்பற்ற திருநெல்வேலிமயானம் நாய்களால் குதறப்படும் பிரேதங்கள்

## பொதுமக்கள் பெரும் விசனம்

(கல்வியங்காடு)

திருநெல்வேலி கிழக்கு இந்துமயானம்பாதுகாப்பற்றதாக உள்ளதனால் அயலில் வசிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மயானத்தின் சுற்றுப்புற வேலித் தகரங்கள் இடப்பெயர்வின் போது களவாடப்பட்டு விட்டமையால், மயானத்தில் தகனம் செய்வதற்கு கொண்டுவரப்படும் பிரேதங்களை நாய்கள் இழுத்து கடித்துக் குதறி உடல் உறுப்புக்களை அயல் வீடுகளில் போட்டுவிடுவதாகவும், அதனால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இங்கு பிரேதங்களைத் தகனம் செய்யும் பொழுது அப்புகை அயல்வீடுகளுக்கும் பரவுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் பரவுவதுடன், சூழல் மாசடைதலுக்கும் வழிவகுக்கின்றது.

இம்மயானத்தைச் சுற்றி பாதுகாப்பானவேலி அடைத்து, வாயிலுக்கு கதவு பொருத்தி மயானத்திற்கு ஒரு காவலாளியையும் நியமிக்க வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய இந்து மயானங்களைப் போல் இம் மயானத்தையும் சீர்திருத்தி அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் எனவும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

(செ-54)

# நிதி நெருக்கடியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் திணறல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிவருகின்ற உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன. இதன் காரணமாக அத்தகைய நிறுவனங்கள் எவ்விதமான செயல்திட்டங்களையும் செயல்படுத்தாமல் இருகின்றன.

இந்தவகையில் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83 மக்கள் நலன் காக்கும் பிரிவு, சமூக அபிவிருத்தி நிறுவனம் அறவழிப் போராட்டக் குழு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளை போன்ற நிறுவனங்கள் நிதியில்லாமை காரணமாக புதிய திட்டங்களைத் தீட்டாமல் இருந்து வருவதாகத் தெரியவருகிறது

இத்தகைய நிறுவனங்களில் பலகாலமாகச் சேவையாற்றி வந்துள்ள ஊழியர்களுக்கான பதிப்பூழியங்களைக் கூடச் செலுந்த முடியாமல் நிறுவனங்கள் இருப்பதுபற்றியும் அறியப்படுகிறது.

(க-77)

க.பொ.த (சாதாரண) மாணவருக்கு

# அஞ்சல் அறிமுக அட்டை வழங்க நடவடிக்கை

(இணுவில்)

இவ் வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மைகருதி, நடமாடும் சேவை ஒன்றின் மூலமாக அஞ்சல் அறிமுக அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வடமாகாண அஞ்சல் திணைக்களம் மேற்கொண்டுவருவதாகவும், இது சம்பந்தமான மேலதிக அறிவுறுத்தல்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

(செ-49)

# கியூமெடிக்கா நிறுவனம் இடம்பெயர்ந்தோருக்கென 608 வீடுகள் அமைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள கியூமெடிக்கா நிறுவனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளைச் செய்து வருகின்றது.

இந்த நிறுவனம் அண்மையில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக தென்மராட்சி, பளை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்தங்கியிருக்கும் மக்களுக்கு இதுவரை அறுநூற்றெட்டு வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த வீடுகளை ஆனைக்கோட்டை, நவாலி, சட்டுடை, எழுமுள்ளி, மானிப்பாய் சாத்தவித்தை, சுதுமலை உயரப்புலம், முள்ளி, கொக்குவில், அராலி ஆகிய பகுதிகளில் அமைத்துக் கொடுத்துள்ளதுடன் அம் மக்களுக்குத்தேவையான உலர் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், பாய், படுக்கைவிரிப்புகள், பாத்திரங்கள் என்பவற்றையும் வழங்கி வருகின்றது.

இந்த வீடுகளைப் பெறுவதற்காக மேலும் 800 பேர் பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு அடுத்த ஆண்டு முற்பகுதியில் வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இந் நிறுவனத்தின் இயக்குநர் சாம். இராசசூரியா தெரிவித்துள்ளார்.

மேலும் இந் நிறுவனத்தின் மூலம் பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி, சக்கரநாற்காலி மீன்பிடிவலைகள் என்பவற்றைவிநியோகித்து வருவதுடன் இலவச மருத்துவசேவை, பாலர்பாடசாலை என்பவற்றையும்நடத்திவருகின்றனர்.

அத்துடன் மெடி மேசின்ற நடமாடும் வைத்திய சேவை மூலம் ஒவ்வொரு வாரமும் இடம் பெயர்ந்த மக்கள் குடியிருக்கும் முகாம்களுக்குச் சென்று சிகிச்சையளித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

(க-120)

# இல. வரும் பிரித்தானிய அமைச்சர் புலிகளை சந்திக்கமாட்டார்

## பிரி.தூதுவராலயம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரவிருக்கும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச்சந்திக்கமாட்டார். என இலங்கையில் அமைந்துள்ள பிரிட்டன் தூதுவராலயம் தெரிவித்துள்ளது

இம்மாதம் 21-ஆம் திகதி இலங்கை வரவுள்ள ஹெயின், விடுதலைப்புலிகளின்பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்புகள் இருப்பதாக நேற்று முன்தினம் லண்டனில் வெளியான ஏ எஸ். பி. தனது செய்தியறிக்கையில் தெரிவித்திருந்தது.

மேற்படி செய்தியறிக்கையை மறுத்துள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவராலயம், அவர் திட்டமிட்டபடி இலங்கை ஜனாதிபதி, மற்றும்எதிர்க்கட்சித்தலைவர் ரணில், தமிழ்க்கட்சிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைஅதுதொடர்பான இவர்களின் நிலைப்பாடு குறித்து விரிவாக ஆராய்வார் என தெரிவித்துள்ளது.

இதே சமயம், வன்செயல்களை கைவிட்டு இரு தரப்பினரும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்பவேண்டும் என கருத்து வெளியிட்டுள்ள பீற்றர் ஹெயின் ஒரு தரப்புடன் மட்டும் பேசிசெல்வது பொருத்தமானதாய் இருக்காதென அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

(உ)

## இன்று ஒரு தகவல்

# நிலையான உறுதிப்பாடு

ஒரு சமயம் காட்டில்மான்களெல்லாம் கூடி ஒருதீர்மானம் நிறைவேற்றின. அதன் சாரம் என்னவென்றால் "நாம் நாய்களைவிட அதிகமாக ஓடக்கூடிய இனம். அவைகளைவிட அதிக உயரம் எழும்பக் கூடிய சக்தியும் நமக்கு உள்ளது. நமது கால்கள் நாய்களின் கால்களைவிட மெல்லியவை. நாய்கள் வேகத்தில் ஒருபோதும் நம்மை எட்டிப் பிடிக்கமுடியாது. நாம் எப்போதும் சாத்வீக உணவே உண்ணுகிறோம், நாய்களோ ராஜசிக (மாமிச) உணவு உண்கின்றன. இப்படி உயர்ந்த சத்தியும் உயர்ந்த பழக்க வழக்கங்களும் இருந்தும் நாம் ஏன் நாய்களைக் கண்டு பயப்பட வேண்டும் என்பதாகும். எல்லா மான்களும் "இதுநியாயமான கேள்வியே! நாம் இனி நாய்களுக்குப் பயப்படக்கூடாது" என்று ஆமோதித்தன.

அப்போது, தூரத்தில் நாய்கள் குரைப்பது அவைகளின் காதில் கேட்டது. உடனேஒரு மான்கூட அங்கு நிற்காமல் எல்லாம் சிதறி ஓடிவிட்டன. இப்படித்தான் நமது கூட்டங்களும் இப்போது நடக்கின்றன. பற்பல சாதனைகள் செய்யவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றனவேயன்றி, நடைமுறையில் கடைப்பிடித்தல் என்ற கட்டத்தில் எல்லோரும் ஓடிவிடுகின்றனர். இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஏதோ ஒன்று செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டால் அதைச் செய்துமுடிக்க வேண்டுமென்று உறுதி எடுத்து, பிடியைச் சற்றும் தளர்த்தாமல் செய்துமுடிக்கவேண்டும். எவ்விதத் தடங்கள் வந்தாலும் அதை எதிர்நோக்கி காத்து பிடித்த பிடியை விடாமல் எடுத்த பணியை முடித்துவிடுவதே தலைசிறந்த சாதனையாகும்.

நன்றி
பாபா சொன்ன கதைகள்

# வன்னிப் பகுதியில் மருத்துவ நிலைமை படுமோசம்

# மரணத்தின் விளிம்பில் மக்கள்

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மருத்துவ மற்றும் உணவு வசதிகள் மிக மோசமடைந்து வருவதாகவும், இதனால் மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதமற்ற நிலை தோன்றியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில், மல்லாவி மருத்துவமனையில் 95 வீதமான மருந்துப் பொருட்கள் முடிவடைந்து விட்டதாகவும், இதனால் வைத்திய சேவையை தொடர்ந்து முன்னெடுப்பதில் வைத்தியசாலை வட்டாரங்கள்பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

நீரிழிவு, மூட்டுவாதம், வாதம், இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு முற்றாகவே சிகிச்சையளிக்க முடியாத நிலைஅங்குதோன்றியுள்ளது.

மற்றும் விசர்நாய்கடிக்கான மருந்தும் முற்றாகவேதீர்ந்து போயுள்ளது.

பூநகரி சுகாதார சேவையினர் விடுத்த செய்திக்குறிப்பில் இரண்டாயிரத்து 287 சிறார்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், வன்னிக்கான மருந்துப்பொருட்களை எடுத்துச்செல்ல பாதுகாப்பு உயர்பீடம் அனுமதி வழங்கியுள்ள போதிலும், இராணுவக் கட்டுப்பாடுள்ள வன்னிப்பகுதியில் இருந்துஅவற்றைஎடுத்துச் செல்ல வன்னிப்படைத்தரப்பினர் அனுமதி மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

# குப்பைகூழங்களாக மாறும் யாழ்.இந்துமைதானச்சந்தி

(கல்வயல்)

யாழ். கஸ்தூரியார் வீதியில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்குப் பக்கத்திலும் யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை முன்பாகவும் மற்றும் அரசடி வீதியும் கஸ்தூரியார் வீதியும் இணையும் சந்தி ஆகிய இடங்களில் யாழ். மாநகர சபை வண்டிகளில் ஏற்றிவரப்படும் குப்பைகள் குவிக்கப்படுகின்றன.

குப்பை கூழங்கள் குவிப்பதை அகற்றும் பணியாளர்களே இவ்வாறு செய்வது 'வேலியே பயிரை மேயும்' செயலாக உள்ளதென பாடசாலைச் சமூகத்தினர் மனம் புழுங்குகின்றனர். (க-111)

## வவுனியாவில்

# இராணுவ அனர்த்தம் தமிழ்ப் பெண்கள் தவிப்பு

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் 3 ஆயிரத்து 379 தமிழ்ப் பெண்கள் தமது குடும்பத் தலைவரை இழந்து விதவைகளாகியுள்ளனர் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இப் புள்ளி விபரத்தின் படி 334 பேர் 40வயதிற்குட்பட்டவர்கள் எனவும் ஏனையோர் 40 வயதிற்கு மேற்பட்டோர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-05)

# பயணிகள் நன்மை கருதி பஸ் சேவை மாற்றம்

யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை பருத்தித்துறை நோக்கிச் செல்லும்பேருந்து வண்டிகளின் புறப்படும் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி ஊடாகச் செல்லும் 750 ஆம் இலக்க பேருந்து காலை 6.30 மணிக்கும், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஊடாகச் செல்லும் 751 ஆம் இலக்கப் பேருந்து காலை 6.45 மணிக்கும் புறப்படும்.

முன்பு 750 ஆம் இலக்கப் பேருந்து 6.45க்கும் 751-ஆம் இலக்கப் பேருந்து 7.30 மணிக்கும் புறப்பட்டமை அனைவரும் அறிந்ததே. (ச-111)

# வெங்காயத்தை இறக்க அரசு முடிவு செய்துள்ளது

(கொழும்பு)

நாட்டில் தற்போது வெங்காயத்திற்குத் தட்டுப்பாடு நிலவுவதை அடுத்து இந்தியாவிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

வெங்காயச் செய்கையில் விவசாயிகளின் ஆர்வம்குன்றியதை அடுத்து உற்பத்தி குறைந்ததினால் வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனாலேயேவெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ வெங்காயம் 45 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை விற்கப்படுகிறது. (வ)

# கழிவுத்துணி மூடையைக் கண்டு வெருண்டோடிய மக்கள்!

(கொழும்பு)

கழிவுத்துணி மூடையை குண்டென எண்ணி கலங்கி ஓடிய சம்பவம் அண்மையில் பொறளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

போக்குவரத்து மிகுந்த காலை வேளையில் பாதையோரத்தில் பொதியொன்று காணப்பட்டது. இதனைக் கண்ட பொது மக்கள் பீதியடைந்து குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவித்தனர்.

அவ்விடம் விரைந்த குண்டு செயலிழக்கும் பிரிவினர் பரிசோதனைகள் மேற்கொண்ட போது அது குண்டல்ல வெறும் கழிவுத்துணி மூடை என்ற உண்மை புலப்பட்டது.

இதனை அடுத்து ஒரு மணி நேரமாகத் தடைப்பட்ட போக்குவரத்துக்கள் மீண்டும் சீராகியது. (உ)

# இளம் தாயின் உயிர்காக்க உதவுக



சாவகச்சேரி மீசாலை வங்களா வீதியில் வசித்து தற்பொழுது இடம்பெயர்ந்துள்ள திருமதி சுபாசினி நகுலேந்திரன் ஓர் இருதய நோயாளி ஒரு குழந்தைக்கு தாயாரான இவருக்குப் பலவகைச் சிகிச்சை செய்யப்பட்ட போதும் இதய மாற்று சிகிச்சை அவசியம் என்று வைத்தியர் தெரிவித்துள்ளனர்.

அதன் 'பிரகாரம் சென்னை மெடிக்கல் மிஷன்' வைத்தியசாலையில் இதயமாற்று சிகிச்சை செய்ய ஏற்பாடாகியுள்ளது. இந்தச் சிகிச்சைக்கு இலங்கைப் பணத்தில் எட்டு இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் நோயாளியின் குடும்பப் பொருளாதார நிலமை அதற்கு உகந்ததாக இல்லை. இந்த இளந்தாயின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு சாவகச்சேரி லயன்ஸ்கழகம் உதவி நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கருணைஉள்ளம் கொண்டவர்களின் உதவியினால் இதுவரை எமக்கு(366413-22) ரூபா சேர்ந்துள்ளது. இந்த நிதிக்கு பணம்சேகரித்து உதவுவதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், வடமராட்சி,தென்மராட்சி பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களும், இன்னும் பல பரோபகாரிகளும் முன்வந்துள்ளனர். ஒரு தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்கு உங்களால் இயன்ற நிதிவழங்கி உதவுங்கள். நீங்கள் அன்பளிப்புச் செய்யும் நிதியை இலங்கைவங்கியின் சாவகச்சேரிகிளையில் (தற்பொழுது) பருத்தித்துறை யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. இதற்கென தொடங்கப்பட்டுள்ள 16524 கணக்கு இலக்கத்திற்குச் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுளளது.

இந் நிதிக்கென யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் 54 ஆயிரத்து 83 ரூபா 50 சதம் நிதியை பருத்தித்துறையில் இயங்கும் இலங்கைவங்கியில் சாவகச்சேரிக்கிளையில் வைப்புச் செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# தோட்ட இளைஞர்களை சரணடைய உத்தரவு

# தொழிலாளர் போர்க்கொடி

(கொழும்பு)

டன்சில் தோட்டப் பகுதியைச் சேர்ந்த 13 தமிழ் இளைஞர்களை சரணடையுமாறு பொலிஸார் உத்தரவு பிறப்பித்ததை எதிர்த்து அப்பகுதி தோட்டத்தொழிலாளர்கள் கடந்த புதன்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

மேற்படி 13 பேருடைய சரணடைதல் தொடர்பான கோரிக்கையை பொலிஸார் கைவிடும் வரை தமது போராட்டம் தொடரும்என சம்பந்தப்பட்ட 307 தோட்டத்தொழிலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

உண்மைத் தன்மையற்ற அநாமதேய தகவல்களின் அடிப்படையில் மலையக இளைஞர்கள் பலர் இவ்வாறு கைது செய்யப்பட்டு வருவது அண்மைக்காலத்தில் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# அபி.இலக்கை அடையாத அமைச்சர்மீது நடவடிக்கை

## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

உரிய அபிவிருத்தி இலக்கை அடையாமல் அதற்கு காரணம் காட்டி நழுவப்பார்க்கும் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க கடுமையாக எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற அமைச்சர்களுடனான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதியால் மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

எதிர்வரும் சில வருடங்களில் துரித அபிவிருத்தியை எதிர்பார்ப்பதாகவும், இதற்கு அனைத்து அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும், பணிகளை ஒழுங்காகச் செய்யாது அதற்கான மழுப்பல் நியாயங்களைக் கூறும் மரபில் இருந்து விடுபட வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## தற்கொலையாளிபோல்

# வேடமிட்டு வங்கியில் கொள்ளையிட முயற்சி

## கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

தற்கொலைக் குண்டுதாரிகள் போல் நடித்து வங்கியில் கொள்ளையிட முயன்றவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் மதியமளவில் கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கிக்கிளையில் இடம்பெற்ற இத் தில்லுமுல்லு பற்றி தெரியவருவதாவது,

மார்புப்பகுதியில் மட்டைகளை வைத்துக்கட்டி தற்கொலைக் குண்டுதாரிகள் போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்ட இருவர் தாம் தற்கொலைப்போராளிகள்என காவலர்களிடம் அச்சுறுத்தி, வங்கியின் உள்ளே போக முயன்றனர்.

இவர்களின் தந்திரத்தை புரிந்துகொண்ட காவலர் துரிதமாகச் செயற்பட்டு துப்பாக்கியால் இவர்களை நோக்கிச் சுட்டதாகவும்,

துப்பாக்கிக்குண்டு பாய்ந்த நிலையில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டதாகவும் மற்றையவர் தப்பியோடி விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களே இம் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# இந்து சமய பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அந்நிய ஏகாதிபத்தியத் தாக்கங்களை எதிர்த்துச் சைவத் தமிழ் பண்பாட்டின் நிலைபேற்றுக்காக தமது உடல் பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை நாளை 19 ஆம்திகதிநிகழவிருப்பதால் அன்றைய தினத்தில் அவரது குருபூசையை சிறப்பாகக் கொண்டாடுமாறு அனைத்துச் சைவத் தமிழ் நிறுவனங்களையும், அனைத்து இந்து ஆலய தர்மகர்த்தாக்களையும் இந்துசமயப் பேரவை அன்புடன் கேட்டுக்கொள்கின்றது. (க)

## ஒன்றுகூடவும்

பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய இளைஞர் மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மேற்படி ஆலயமண்டபத்தில் ஒன்று கூடுமாறு இளைஞர்மன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. (செ-59)

## பிஜியில் இடைக்கால
# இராணுவ ஆட்சி செல்லுபடியாகாது
## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(சுபா)

பிஜியின் இடைக்கால இராணுவ ஆட்சி செல்லுபடியாகாதென்று அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதன்பின் அமைந்த இடைக்கால அரசுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிலே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது

அத்தீர்ப்பில் இடைக்கால அரசை விலகும்படியும் முறைப்படி ஜனநாயக வழியில் தெரிவான பாராளுமன்றமும் மந்திரிசபையும் செல்லுபடியாகுமென்றும் மேற்படி நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இத்தீர்ப்பின்படி பழையபடி சௌத்திரி அரசு அரசாங்கத்தை அமைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜோர்ச்பெயிட்ஸ் தலைமையில் பிஜியில் கடந்த சில மாதங்களுக்கு முன் புரட்சி ஏற்பட்டதும் அதனைத் தொடர்ந்துமுறைப்படி 1997 ஆம் ஆண்டுதொடக்கம் அதிபராகமகேந்திர சௌத்திரியும் இருந்து வந்ததும், பின்னர் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (து)

## சிரிய ஜனாதிபதி
## பணிப்புரை விடுத்தார்

(டமாஸ்கஸ்)

அரசியல் கைதிகள் அறுநூறுபேரை விடுதலை செய்யுமாறு சிரிய ஜனாதிபதி பஜார் அல் அணி பணித்துள்ளார்.

தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்த லெபனன் கைதிகளும் சிரிய நாட்டுக் கைதிகளும் இதில் அடங்குவர்.

இக்கைதிகள் பலவித சதி வேலைகளிலும் ஒற்றுக் கொடுத்ததின் பேரிலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுவிக்கப்படுவோரில் நூறு பேர் லெபனானியர் என்று சொல்லப்படுகிறது. (து)

## இலண்டன்
## பத்திரிகை செய்திக்கு
## சீனா தரப்பில் மறுப்பு

(பீஜிங்)

சீன- இந்திய எல்லையில் பதற்றம் காணப்படுவதாக இலண்டன் பத்திரிகை வெளியிட்ட செய்தியை சீனா மறுத்துள்ளது.

இலண்டன் ஆங்கிலஏடான மேற்படி பத்திரிகை பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிட்டிருக்கிறதென்றும். உண்மைக்குப் புறம்பான வகையில் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கிடையேயான எல்லையில் அமைதி நிலவுவதாகவும் இருநாடுகளுக்கு மிடையேயான எல்லைப் பேச்சுகளில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இலண்டன் வாரப்பத்திரிகையை சுட்டியே சீனா வெளியுறவு அமைச்சின் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (து)

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்
# புளோரிடா மாநில வாக்குகள்
# மீண்டும் எண்ணப்பட மாட்டாது
## தேர்தல் அதிகாரி தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் புளோரிடா மாநிலத்தில் இனி வாக்கெண்ணப்படமாட்டாது எனசம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் இம்மாநிலத்தில் முதலில் இயந்திரங்கள் மூலம் எண்ணப்பட்டது.

## உலக தரிசனம்

அதன் பின் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து கையால் எண்ணப்பட்டது, இதனைத் தொடர்ந்து ஜோர்ச்பின் புஷ் அல்கூர் ஆகியோர்வழக்குகளைமாறி,மாறி செய்ததும் தெரிந்ததே.

இதனையடுத்தே வாக்குகள் எண்ணும் அதிகாரி இனி மேல் வாக்குகள் எண்ணப்படமாட்டாதென்று தெரிவித்தார்.

இறுதி எண்ணிக்கையின்படி ஜனநாயகக் கட்சி அல்கூரை விட குடியரசுக்கட்சி ஜோர்ச் புஷ் முந் நூறு வாக்குகள் முன்னணியில் இருக்கிறார்.

இதேவேளை அல்கூர் ஜோர்ச் புஷ்சுடன் உரையாடுவதற்கு அழைப்பு விடுத்த போதும் அல்கூர் அவ் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## அமெரிக்க ஜனாதிபதி
## பன்னாட்டு தலைவர்களை
## சந்தித்துப் பேச்சு

(வாஷிங்டன்)

ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்ள புருணை செல்லும் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் அங்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.

ரஷ்யா, தென்கொரியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் இதில் அடங்குவர்.

அதைத்தொடர்ந்து சரித்திரப்பிரசித்த பெற்ற 3 நாள வியட்நாம் பயணத்தை ஆரம்பிக்கவிருப்பதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1975 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த அமெரிக்க-வியட்நாம் யுத்தத்தின் பின் வியட்நாம் செல்லும் முதல் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன்என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வியட்நாம் யுத்தங்கள் இடம்பெற்றவேளை அங்கு காணாமல் போன அமெரிக்க துருப்பினர் பற்றிய விபரங்களை திரட்டுவதே இப்பயணத்தின் முக்கிய நோக்கம் என கூறப்படுகிறது.

மேற்படி யுத்த காலத்தில் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட அமெரிக்கப் படைகளும், 15 இலட்சத்திற்கும் அதிகமான வியட்நாமியரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தேர்தல் முடிவுகள் தாமதம்
## அமெரிக்கர்கள் அதிருப்தி

(வாஷிங்டன்)

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து அமெரிக்க மக்கள் அதிருப்தியடையத் தொடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

தேர்தல் முடிவுகள் தொடர்பான முட்டுக்கட்டைஅமெரிக்காவைச் செயலிழக்கச் செய்யலாம் என மக்கள் கருதுவதாக அரிசோனாவின் குடியரசுக்கட்சி செனட்டர் ஜோன் மக்கெய்ன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேசமயம், அமெரிக்கத் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் அந்த நாட்டின் தேர்தல் முறைகளின் மேல் விழுந்துள்ள கரும்புள்ளி எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-உ)

## கிரிக்கெட் டெஸ்ட்

சிம்பாப்வேக்கு எதிராக இந்தியாவில் இன்று சனிக்கிழமைஆரம்பமாகும்டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் தலைவராக சௌரவ் கங்குலி கலந்து கொள்வார்.

அண்மையில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (க-22)

### பாக் இந்திய கிரிக்கெட் உறவில் விரிசல்

இந்தியாவுடனான கிரிக்கெட் உறவுகள், தொடர்புகள் அனைத்தையும் துண்டிக்கப் போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் பாகிஸ்தானுடன் நிகழவிருந்த மூன்று, ஐந்து நாள் டெஸ்ற் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா பங்கேற்காது எனவும் அப்போட்டிகளை இந்தியா தள்ளுபடி செய்திருப்பதாகவும் அறிவித்ததை தொடர்ந்தே பாகிஸ்தான் இவ் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இதேசமயம், இந்தியாவின் இவ் அறிவிப்புபாகிஸ்தானுக்கு பல மில்லியன் ரூபா இழப்பினை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. (உ)

## சந்தனமரக் கடத்தல்
## வீரப்பனைச்சிறைபிடிக்கவும்
## அல்லதுசுட்டுக் கொல்லவும்
## செல்வி ஜெயலலிதா ஆவேசம்

(சென்னை)

சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்கவேண்டும் அல்லது சுட்டுக் கொல்லவேண்டும் என்று ஜெயலலிதா தெரிவித்தார்.

கன்னடநடிகர் விடுதலையானதையொட்டி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில வீரப்பனை இராணுவத்தைக்கொண்டோ,காவல்துறையைக் கொண்டோ சுற்றிவளைத்துப் பிடித்து சிறையில் இட வேண்டும். அல்லது சுட்டுக் கொல்லவேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ்நாடு மாநிலமும் கர்நாடக மாநிலமும் இணைந்து வீரப்பன் விடயத்தில கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அல்லது

நடிகர் ராஜ்குமார் போல் வேறு பலரும் கைதாகலாமென்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மாநில காங்கிரஸ் பிரமுகர் மூப்பனார் ராஜ்குமார் விடுதலை விவகாரத்தை அரசு வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதனையொட்டி திராவிடர்கழக வீரமணியும் வீரப்பன் மேல் தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (து)

## ஐ. நா. வில் புதிய கோட்பாடு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபை குற்றவியல் தடுப்புக் கோட்பாடு ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

ஐ.நா. பேரவையில் நிறைவேற்றப்பட்ட இக்கோட்பாட்டின்படி போதைப் பொருள் கடத்தல் ஆள் கடத்தல், பணக் கடத்தல் கறுப்பு பணத்தை வெள்ளைப் பணமாக்குவது தொடர்பான குற்றங்களை தடுப்பதற்கும் துண்டிப்பதற்கும் சட்டங்கள் இயற்றும் வழி செய்கிறது இக்கோட்பாடு. (து)


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA
## SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 30th December 2000 for the undermentioned posts:-

1. Senior Lecturer Grade 1 / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in
   - SIDDHA MEDICINE
   - MICROBIOLOGY
   - POLITICAL SCIENCE
   - GEOGRAPHY
   - PSYCHOLOGY
2. Assistant Lecturer / Demonstrator on Contract in
   - SIDDHA MEDICINE

| POSTS | SALARY SCALE |
|---|---|
| Senior Lecturer Gr. I | Rs. 19,125 - 8x475-22,925/-p. m. |
| Senior Lecturer Gr. II | Rs. 16,675-5x475-19,050/-p.m. |
| Lecturer (Probationary) | Rs. 11,000-10x375-14750/-p. m. |
| Assistant Lecturer (on Contract) | Rs. 10,800/- p.m. (fixed) |
| Demonstrator (on contract) | Rs. 9,000/- p. m. (fixed) |

In addition to the above salary, an academic allowance of 30% of the salary approved by the University Grants Commission will also be paid to the posts of Senior Lecturer Gr. I, Senior Lecturer Gr. II and Lecturer [Probationary].

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a Money Order for Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the 'Bursar, University of Jaffna' together with a selfaddressed stamped envelope 23x10cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
16-11-2000 (C/1041)

அல்லற்பட்டு ஆற்றாது அழுத
கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும்
படை.

- குறள்

வலம்புரி

## எயிட்ஸ் கொடூரம்

தமிழர்களின் பண்பாடு - கலாசாரம் ஒழுக்கத்தின் அடித்தளத்திலிருந்து கட்டப்பட்டது. அதனால் ஒழுக்கமற்ற செயற்பாட்டினால் ஏற்படக் கூடிய வியாதிகளுக்குத் தமிழ்ச் சமூகம் ஆளாகவில்லை. சமயங்களும், சமுதாய வழக்கங்களும், கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் தமிழ் மக்களின் ஒழுக்க நெறியினைக் கட்டிக் காத்தது. பாதை மாறக் கூடிய பருவத்திற்கு வேலிபோட்டது இதனால் அன்று மகிழ்வான வாழ்விற்குக் குறைவில்லை.

ஆனால்இன்று நிலைமை அப்படியல்ல. யுத்தத்தின் கொடுமை புலம் பெயர்விற்கு வித்திட்டது. இதனால் வெளிநாடுகளில் நம்மவர்கள் தஞ்சம் புகுந்தனர். கட்டுப்பாடற்ற வாழ்க்கை, ஒழுக்கமற்ற பண்பாடு, போதைப் பொருள் பாவனை இப்படியே அந்நாடுகளின் கலாசாரத்திற்குள் மூழ்கினர்.இதன்அறுவடைதான் இன்று நாம் பார்க்கின்ற பயப்படுகின்ற 'எயிட்ஸ்' நோயாகும்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது சில வருடங்களில உலகில எயிட்ஸ் அதிகமாகவுள்ள ஆபிரிக்க நாடுகளுக்குச் சமமாக யாழ்பபாணமும் வந்து விடுமோ என அஞ்சத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணத்தில்இனங் காணப்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்களென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து எயிட்ஸ் நோயுடன் யாழ்ப்பாணம் வந்ததுமட்டுமல்ல, அவர்கள் இங்கு திருமணமும் செய்துள்ளனர்.

இதனால் ஏதும் அறியாத அப்பாவிப் பெண்களும் இந்நோய்க்கு ஆளாக வேண்டியுள்ளது.

எனவே இதனைத் தடுப்பதில் சுகாதாரத் திணைக்களமும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் தீவிர பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

எயிட்ஸ் நோய் பற்றிய விளக்கங்களை மாணவர்கள், மற்றும் சமூகத்தின் மத்தியில் எடுத்துக் கூறி ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமே எயிட்ஸ் நோயின் வேகத்தைக்கட்டுப்படுத்த முடியும்.

# பிள்ளைகளின் தேடல் பண்பை ஊக்குவிக்கும் வகையில் பெற்றோரின் ஆதரவும் அவசியமே!

'அகவொளி குடும்பவளத்துணை நிலைய' கார்த்திகை மாத முழுநிலா நாள்கருத்தரங்கில் ''சிறுவர்களை வழி நடத்துவதில் பெற்றோரின் பங்கு'' எனும் தலைப்பில்U.Kசிறுவர்பாதுகாப்பு, சிறுவர் நிகழ்ச்சித் திட்ட அலுவலர்திருமதி ஒலிவற் ஜெனோவா அல்பிரட் கருத்துரை வழங்கினார். அதன் தொகுப்பு இது. (ஆர்)

எமது எதிர்காலமே எமது சிறார்கள் தான். எம்மோடு இருக்கின்ற எமது நலனில்அக்கறை உள்ள விலைமதிப்பற்ற குழந்தைச் செல்வங்களைக் கவனியாது நிலையற்றபணம் பதவி தேடி ஓடித் திரிகின்றோம்.எமது நிறைவானசெல்வங்களான சிறார்களை வழி நடத்துகின்ற பொறுப்பு பெற்றோர்க்கு மட்டுமல்ல சமூகத்திற்கே உள்ள பெருங்கடனாகும்.

சிறுவர்களின் விடயங்களில் நாம் கருத்தூன்றிச்செயற்பட வேண்டியவர்களாகஇருக்கின்றேம் எமது வாழ்க்கைப் பயணத்தைஒருமுறை பின்னோக்கிப் பார்த்து எமது சிறார்களின் பொன்னான எதிர் காலத்தை வளமாக்கும்செயற்பாட்டில் முழுமூச்சாக ஈடுபடுவது பெற்றோர்க்குரிய தலையாய கடனாகும்.

இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் அவர்களே நாட்டின் ஆற்றல் மிக்க செல்வங்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

### குழந்தைப் பருவம்

குழந்தைப் பருவம் மிகவும் அபூர்வமான பருவம். ஒருவருடையவாழ்வில் அது ஒருமுறை தான் வரும்.

குழந்தைகள்இன்றேகவனிக்கப்படவேண்டியவர்கள் அவர்களுக்கு நாளை என்று சொல்லக்கூடாது. அவர்களே நாளைய எதிர் காலம்.

ஆம் மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் இளமைப்பராயத்தின் பெறுமதியையும் சிறப்பையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

### மனம் உடைதல்

சிறுவர்களைப் பொறுத்தவரை அவர்களின் தேவைகள் உடனடியாகப் பூர்த்தி செய்து வைக்கப்பட வேண்டியவை. சிறுவர்கள் இலகுவில் மனம் உடையக்கூடியவர்கள். நொந்துபோகக்கூடியவர்கள். எனவே அவர்கள் நலனில் போதிய அக்கறை காட்டப்பட வேண்டும்.

இன்று உலகளாவிய ரீதியிலும் சிறுவர்களைப் பொறுத்தவரை மிகுந்த அக்கறைகாட்டத் தொடங்கியிருக்கிறார்கள். முதியோர்கள், அங்கவீனர்கள், பெண்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அதே அளவு முக்கியத்துவம் சிறுவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

18 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சிறுவர்கள் என்ற வகுப்பினுள் அடக்கப்படுகின்றனர்.ஆண்,பெண் சமத்துவத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் மனித உரிமைகள் சாசனம் மூலம் எமது சமுதாயத்திற்கு ஒருஅடிகிடைத்துள்ளது. எமது சமுதாயம் ஆண் வர்க்கத்தினருக்கு முன்னுரிமை கொடுப்பதே இதற்குக் காரணமாகும்.

### கற்றல் உறவு

அம்மா, அப்பா, குடும்ப அங்கத்தவர்கள், பாலர்பாடசாலை ஆசிரியர்கள் எல்லோரும் குழந்தையைப் பராமரிப்பவர்களாக இருக்கிறார்கள். ஒரு குழந்தை முதன்முதல் தன் புலன் உணர்வுகளினூடாகவே கற்க ஆரம்பிக்கிறது. உறவு முறையிலான அணுகுமுறையினூடாக இலகுவாக பிள்ளையினுடைய அறிவை விருத்தி செய்ய முடியும்.

கற்றலுக்கானசந்தர்ப்பங்கள் ஒரு பிள்ளைக்கு ஒரு நாளைக்கு நிறைய உண்டு. உறவு முறையிலான அணுகுமுறையினூடாகப் பிள்ளை புதியனவற்றைக் காணவும், பிரித்துப் பார்க்கவும், தான் கண்டதைப் பற்றிப் பேசவும், வெளிப்படுத்தவும்,ஆராயவும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தவும் முடிகிறது. இதனால்விருத்தி அறிவு அடைகிறது.

### அரவணைப்பு

ஒரு குழந்தையைப் பூரணத்துவம் அடையச் செய்வதற்குப் பணம் முக்கியத்துவமான ஒன்றல்ல. மாறாக அன்பு, ஆதரவுபுரிந்துணர்வு, பொறுமை, உற்சாகமூட்டித் தட்டிக் கொடுத்தல், தேவையோடு கூடிய விளைவு காட்டல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நல்ல உறவு முறையினூடாக அதிபுத்தி உணர்வுள்ள அபிவிருத்தியுடன் கூடிய ஒரு பிள்ளையை உருவாக்க முடியும்.

பிள்ளையின் ஒவ்வொரு செயல்களையும் நாம் புரிந்துணர மறுக்கின்றோம். பொருளாதாரத் தாக்கம், பெற்றோரின் பொறுமையைக்குலைக்கிறது இதனால் எல்லாவற்றுக்குமே சிறுவர்கள் மீது அவர்கள் பாய்கின்றனர். இது ஆரோக்கியமானதல்ல. பிள்ளை சுகவீனமுற்றபோதோ அல்லது உளரீதியாகப் பாதிக்கப்பட்டபோதோ அதற்குப் பெற்றோரின் ஆதரவும் அரவணைப்பும் தேவை.

பெற்றோர்களின் நடத்தையினூடாகவும் தான்கண்டவற்றையும் கேட்டவற்றையும் கொண்டும் தமது அறிவை அது விருத்திசெய்வதால் பெற்றோர்கள் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.

### திறன் விருத்தி

குழந்தையின் தேடல் பண்பு அவனின் பரந்துபட்ட அறிவை வளர்க்கவும், ஒவ்வொன்றுக்குமான காரணங்களைத் தேடவும், உறுதுணை புரிகிறது. இன்றைய ஒப்படைக்கல்வி முறையும் இதனை விருத்தி செய்வதில் பெரும்பங்கு ஆற்றுகிறது.

பிள்ளைகளுக்கு சந்தேகங்கள வலுப்பதற்கு இடமளிக்கக் கூடாது. இது அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக மாறும் போது அவர்களுள்ளே பூதாகரமான பிரச்சினையாக எழுகின்றது. எனவே அவர்களைச் சரியாக நெறிப்படுத்துவதற்கு உறவு முறைக் கற்றலே சிறந்தது.

### நோக்கம்

சிறுவர் அபிவிருத்தியின் நோக்கம் அல்லது நிலைபற்றி நோக்கும் போது பிள்ளை தாய் உறவு, புவியியல் அரசியல் சூழல், குடும்பமும் பண்பாடும் போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

### தொடர்பு

குழந்தைகளுடன்தொடர்பு கொள்ளுதல் என்பது மிகமிக முக்கியமானது செயல் அல்லது எதிர்ச் செயல்களில் மதிப்பு அல்லது முக்கியத்துவம் கொடுத்தல், கண் மூலம் தொடர்பு கொள்ளல் போன்ற வழிகளால் அவர்களின் ஆழ்மன விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். அவனின் ஒவ்வொரு செயலுக்கும் எதிர் விளைவு காட்டாது போனால் எதிர்காலத்தில் பாரிய தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புண்டு

எமது உணர்வுகளை முதன் முதலில் கண்மூலமே பிறருக்கு அறியச் செய்கிறோம். பிள்ளைகளின் கண்களைநேருக்கு நேர் நோக்கவேண்டும் இதன் மூலம் நேர்மையான நெஞ்சிலே தூய்மை உள்ள மனிதனாக அவனை உருவாக்கமுடியும்.

சிறுவர்களின் அபிவிருத்திக்கு அவர்களின் ஆளுமை வளர்க்கப்பட வேண்டும்.ஆற்றல்கள் இனங்காணப்படுதல், தட்டிக் கொடுத்தல், சந்தர்ப்பம் வழங்கல் மூலமாக ஆளுமையை வளர்த்தெடுக்க முடியும் இதன் மூலம் அவனின் ஆற்றல் திறமையாக மாறி அவனைப் பூரண மனிதனாக்குகிறது.

### அவதானம் அவசியம்

பிள்ளைகளுடன் இசைவாக்கம் ஏற்படுவதற்கு அவதானம் அவசியமாகும்.எமது பிள்ளைகளில் இல்லாத ஆற்றலை நாம் அவர்களிடம் திணிக்க முயல்கிறோம். இதனால் முரண்பாடே ஏற்படுகிறது.

### சந்தர்ப்பம் வழங்கல்

சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதலே அபிவிருத்திக்குஆதாரமாகவுள்ள திறவுகோல்ஆகும் சிறுவரை மேம்படுத்தும் படிநிலைகள் குடும்பத்தில் வித்திடப்பட்டு பாடசாலையில் பண்படுத்தப்பட்டு சமூகத்தில் பிரயோகிக்கப்படுகிறது.

சமூகம் எதைப் பிரதிபலிக்கிறதோ அதைபே பிள்ளையும் கண்டுகொள்கிறது அல்லது கற்றுக் கொள்கிறது. ஒவ்வொரு மனிதனும் உதாரண புருஷனாக இருப்பதால் அதனையே சிறுவர்கள் மாதிரியாகக் கொள்கின்றனர்.

சிறந்த அபிவிருத்தி பெற வேண்டின் உடல் ரீதியாக அவனை வளர்த்தெடுப்பதற்குப் போசாக்கான உணவும் உளரீதியான வளர்ச்சிக்கு அன்பு, ஆதரவும் தேவை.

எனவே பலவித கற்றல் அனுபவங்களை அவனுக்கு வழங்கும் போது அவன் உறுதியாக நிற்பான். குழந்தை சிரித்த முகத்தோடு இருந்தால். குடும்பம் சிரிக்கும், சமூகம் சிரிக்கும்,உலகும் சிரிக்கும்.

**எம். எஸ் எஸ் கீர்த்தி**
(அரியாலை நிருபர்)

# இலங்கையை படுகுழியில் தள்ளும் ஏகாதிபத்தியவாதி தூதுவர் எரிக்

## ஜே. வி. பி. பாய்ச்சல்

(கொழும்பு)

தமிழ் மக்கள் படும் துன்பங்களை காரணம் காட்டி, இலங்கையை படுகுழியில் தள்ள முயலும் ஏகாதிபத்திய வாதிகளின் தூதுவராகவே எரிக்சோல்ஹைம் இருக்கிறார்.

இவ்வாறு, அண்மையில் நடந்த கூட்டமொன்றில் ஜே. வி. பி. யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரபாகரனுக்கும் சிங்கள அடிப்படை வாதிகளுக்கும் நிலையான அமைதி நோக்கம் எதுவும் இல்லை.

அவர்கள் இனப்பிரச்சினை மூலம் சுய இலாபம் அடைய முயல்கின்றனர்.

இங்கு நடக்கும் இனப்பிரச்சினையை தீர்க்க நோர்வே அரசுக்கு எந்தவித தேவையும் இல்லை.

நோர்வே அமெரிக்காவின் சதிக் கூட்டாளியாகவே செயற்பட்டு வருகிறது.

பலஸ்தீனத்தில் தலையிட்டு குழப்பத்தை உண்டாக்கியது போன்று இங்கு தலையிட்டு குழப்பங்களை ஏற்படுத்த முயல்கின்றது என்று குறிப்பிட்டார். (உ)

# மோ. சைக்கிள் மோதல் இருவர் ஆஸ்பத்திரியில்

(கரணவாய்)

எதிர் எதிராக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அதில் பயணம் செய்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி நெல்லியடி பஸ் நிலையப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் வதிரியைச் சேர்ந்த சி. பாஸ்கரன் என்பவரும் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து துன்னாலைப் பகுதியில் வசித்து வரும் குமார் என்பவருமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (செ-27)

### பற்றைகள் அகற்றல்

ஈச்சமோட்டை மற்றும் பாண்டியன்தாழ்வுப் பகுதிகளில் வீதிகள், மற்றும் ஒழுங்கைகள் தோறும் காணப்படும் பற்றைகளை யாழ். மாநகர சபை ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.

கடந்தகால இடம்பெயர்வு காரணமாக இப்பகுதிகளிலிருந்து மக்கள் வேறிடங்களுக்குச் சென்றதனால் பற்றைகள் அதிகளவில் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-59)

## திறப்புவிழா

வேலணைபெருங்குளப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ''ஐக்கிய உதயமகால்'' சனசமூக நிலையத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வேலணை பிரதேசசபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கே. கிருஷ்ணசாமி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

(செ-11)

# ஐரோப்பிய பிரதிநிதிகள் படை அதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் நேற்றுக்காலை படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலுள்ள இடம் பெயர்ந்தோர் நலன் புரிநிலையங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஒல்கா உசிடாலோவும் அவரது பாரியாருமே நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் பலாலியிலுள்ள யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமை அலுவலகத்தில் வைத்து நேற்று பாதுகாப்பு அதிகாரிகளுடன் யாழ் பாதுகாப்பு நிலை குறித்து கலந்துரையாடியுள்ளனர்

இதேவேளை வலிகாமத்தில அராலி, மானிப்பாய், சங்கானை, கட்டுக்கோட்டை பகுதிகளிலும், வடமராட்சியில் பருத்தித்துறை, கரவெட்டிப்பகுதியிலுள்ள இடம் பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களுக்கும் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன் ஐரோப்பிய யூனியனின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் தங்கியிருக்கும் இவர்கள் இன்று சனிக்கிழமை விமானமூலம் கொழும்பு செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# திருமலையில் தாக்குதல் ஒருவர்பலி;மூவர் காயம்!

திருமலை மொறவெவ பகுதியில் பொலிஸார் பயணம் செய்த ஜீப் வண்டி மீது கடந்த 15 ஆம் திகதி விடுதலைப்புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில்பொலிஸ் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மூவர் படுகாயமடைந்துள்ளதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

வவுனியா, மன்னார் வீதியில் பம்பை மடுவிற்கும்நெடுக்குளத்திற்குமிடையில் வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுக் காலை 7.30 மணியளவில் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் படைத்தரப்பில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். சம்பவம்நடைபெற்ற போதுவீதியால் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று சேதமடைந்துள்ளதுடன், படையினரால் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதே வேளை நேற்று முன் தினம் சாவகச்சேரிப்பகுதியில் படையினர் நடத்திய சினைப்பர் தாக்குதலில் புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

# தொண்டர் ஆசிரியர்கள் வவுனியாவில்மறியல்போர்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறி வவுனியா கல்வித்திணைக்களத்தின் முன் மறியல் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முதல் ஆரம்பித்துள்ளனர்.

வடக்குக் கல்வி வலையத்தில் 171 தொண்டர் ஆசிரியர் இருந்த போதும் 30 பேருக்கு மட்டுமே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்தே இந்த மறியல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தங்கராசா மாகாணக் கல்வி அமைச்சுடன்தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிய பின் 141 தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களை மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவர்களுக்கு அடுத்த ஆண்டு நியமனம் வழங்கப்படலாம் எனத் தெரியவருகிறது. (வ)

# சாவகச்சேரி இளைஞர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா 'சனச நலன்புரி' நிலையத்தில் இருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சாவகச்சேரியைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிவானந்தன் (வயது 35), யோசப்பு சச்சிதானந்தம் (வயது 24) ஆகிய இருவரும் சனச நலன்புரி நிலையத்தில் தலையாட்டியினால் அடையாளம் காணப்பட்டு கைதாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## அச்சுவேலி இளைஞர்கைது

(கொழும்பு)

வவுனியாவில் இருந்து புகையிரத வண்டி மூலம் கொழும்பு சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று இரவு வவுனியாவில் இருந்து யாழ்தேவி மூலம் கொழும்பு சென்றிருந்தார். ராகமபுகையிரதநிலையத்தில் புகையிரதம் தரித்து நின்றபோது பொலிஸார் திடீர்ச் சோதனை நடத்தி இவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் அச்சுவேலியைச் சேர்ந்த தம்பையா தர்மசீலன் எனவும், இவருக்கு ஒரு கால் இல்லை என்றும் இவரது உடம்பில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் இருப்பதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்துசந்தேக நபர் மீதனா விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ம)

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களின் மகா சபையின் முதலாவது கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சுழிபுரத்திலுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபையின்தலைமைச் செயலகத்தில்நடைபெறவுள்ளது.

இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைவரும் இந்து ஆலயங்களின் மகாசபையின் போசகருமான ந.திரிலோகநாதன் தெரிவித்தர். (ஸ்ரீ)

# இடர்காலக்கொடுப்பனவு வழங்காததைகண்டித்து 23ம்திகதிமறியல்போர்

(திருமலை)

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இடர்காலக் கொடுப்பனவுகள் இதுவரை ஆசிரியர்களுக்கு வழங்கப்படாததைக் கண்டித்து வடக்கு கிழக்கு மாகாண பொது ஆசிரியர்கள் சங்கம் மறியற் போராட்டம் ஒன்றினை நடாத்தவுள்ளது.

இம் மறியற் போராட்டம் இம் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக நடைபெறும்

இப்போராட்டத்தில் ஏனைய தொழிற் சங்கங்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்களின் அபிப்பிராயங்களைப் பெறுமுகமாக 20ம் திகதி திருமலை புனித பிரான்சிஸ்சவேரியார் மகாவித்தியலாத்தில் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. (வ)

# அரச அதிபர்கள் மாநாடு நேற்று நடைபெற்றது

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில்நேற்று இடம் பெற்ற மாநாட்டில் வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச அதிபர்கள் கலந்து கொண்டனர். பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சட் பத்திரன தலைமையில் இம் மாநாடு நடைபெற்றது.

இம் மாநாட்டில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பொதுவான பிரச்சினைகள் ஆராயப்பட்டது. இதன் போதுபோக்குவரத்து, நிர்வாக அதிகாரிகள் பிரச்சினை, ஆளணிப்பற்றாக் குறை என்பன தொடர்பாக கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

அரச அதிபர்களின் கருத்துக்களைக் கேட்டுக்கொண்ட அமைச்சர் பத்திரன இவை தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படுமெனத் தெரிவித்தார். (வ)

## இலங்கையின்...

வேண்டுமென்பதையும் வெளிக்காட்டியுள்ளது.

உள்நாட்டிலும், சர்வ தேச ரீதியிலும் வழங்கப்பட்டு வரும் அழுத்தங்களினாலேயே விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கான தமது விருப்பத்தினைத் தெரிவித்துள்ளனர். இனப்பிரச்சினையின் தீர்வு பேச்சு வார்த்தையின் அடிப்படையில் இடம்பெறவேண்டுமென்பதே ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாடாகும்.

வடக்குக்கிழக்கு மக்களின் உணவுப் பொருட்களின் தேவைகள்உட்பட அனைத்து விடயங்களையும் கவனிக்கும் பொறுப்புக்களை உள்ளடக்கிய ஒரு அமைச்சராகத் தான் நியமிக்கப்பட்டிருப்பதிலும் அவர்கள் கவனம் செலுத்தி உள்ளனர்.

இதேவேளை பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடத்த புலிகள் முன்வந்திருப்பது நல்ல முன்னேறபடாகும் என்றும் குறிப்பிட்டார்.

## இறந்தவரின்...

சேர்ந்த இளைப்பாறிய கணக்காளர் ஜெயராஜசிங்கம் (வயது 68) என்பவர் கடந்த வாரம் காய்ச்சல் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையின் ஒன்பதாம் வாட்டில் அனுமதிக்கப்பட்டார்.

அளிக்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் அவர் உயிரிழந்தார்.

உடனடியாக இறந்தவரின் இரு கண்களும் அகற்றப்பட்டன. பிற்பகல் இரண்டு மணியளவில் இறந்தவரின் உடல் இரவு ஏழு மணிக்கே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சடலத்தை வீட்டுக்குக் கொண்டு சென்ற உறவினர்கள் இறந்தவரின் கண்களிலிருந்து இரத்தம் வழிவதையும் இருகண்கள் அகற்றப்பட்டுள்ளதையும் கண்டுபிடித்தனர்

வைத்தியசாலையில் ஜெயராஜசிங்கம் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவரது கண்ணுக்குள் மருந்துகள் விடப்பட்டு கண் பாதுகாக்கப்பட்டதாகவும், தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன் தினம் பத்து நிமிடத்தில் அல்லது ஐந்து நிமிடத்தில் உயிர் பிரிந்து விடுமென அவரைப் பார்த்துக் கொண்டிருந்த மருத்துவப் பணியாளர்கள் கூறிக் கொண்டு ஆரவாரப் பட்டதாகவும், 9ஆம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய நோயாளர்கள் தெரிவித்தனர். எனினும் அவரது உயிர் பிரியும்போது வழங்கப்பட வேண்டிய மனுநீதி சண்ட மருத்துவ சேவை எதுவும் அவருக்கு அளிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உரியவரின் ஒப்புதலின்றி கண்கள் அகற்றப்பட்ட செய்தி பரவத் தொடங்கியதும் கண் அகற்றிய காரண சர்த்தாக்கள் அவசர அவசரமாக கடிதமொன்றைத் தயாரித்து இறந்தவரின் மனைவியிடம் மரணவீட்டில் வைத்து ஒப்புதல் வேண்ட முனைந்ததாகவும்,முதலில்கையொப்பம் இடமறுத்த திருமதி ஜெயராஜசிங்கம் பின்பு நடந்தது நடந்து விட்டது என்று கையெழுத்தை வைத்துக் கொடுக்குமாறு உறவினர்கள் கேட்டதற்கமைய கையெழுத்திட்டுக் கொடுத்ததாகவும் தெரிய வருகிறது.

இது ஒரு புறமிருக்க, காலஞ் சென்ற ஜெயராஜசிங்கத்தின் உறவினர் ஒருவருக்கும் கண் அகற்றப்படும் சம்பவத்திற்கும் தொடர்பு இருப்பதாகவும், அகற்றப்பட்ட இரு கண்களும் ஒன்று நாற்பதாயிரம் ரூபாப்படி இரண்டும் எண்பதாயிரம் ரூபாவிற்கு விற்கப்பட்டதாகவும் நேற்று இடம் பெற்ற மரணச்சடங்கில் பரவலாகப் பேசப்பட்டது. இத்தொகையில் வைத்தியசாலைப் பணியாளர்கள் சிலருக்கும் பங்கு உண்டென்றும் செய்திகள் அடிபடுகின்றன. (ந)

## கொழும்பில்

வைத்திய நிபுணர்களிடமிருந்த மாத்திரையைப் பெறுவதற்கான கடிதம் கொண்டு செல்வோர் மட்டுமே இம்மாத்திரையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனால் பலர் வைத்தியர்களின் உதவியை நாடிச் செல்வதாகவும் செதிகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமெரிக்காவின் ''பைசர்'' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இம் மாத்திரைகள் வெகுவிரைவில் யாழ்ப்பாணத்திற்கும் எடுத்துவரப்படலாம் என எதிர்பார்கப்படுகிறது. (ஸ்ரீ)

## இன்று

8 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிவில் நிர்வாகக் காரியால்யத்திற்குச் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளைதிங்சட்கிழமை இடம்பெறும் விமானசேவைக்கான பயணச் சீட்டுக்கள் இன்று வழங்கப்படும் எனவும். நாளை ஞாயிற்றுக்கிழமை விமான சேவைஇடம்பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தீவக...

இடையூறு ஏற்படுத்தாமல் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை இம்மாதம் 16ஆம் திகதிவரை பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ஸ்ரீ-3-12)

## காங்கிரஸ்எம்.பி திருமலைவிஜயம்

(திருமலை)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட எம்பியுமான அ. விநாயகமூர்த்தி நேற்று திருமலைக்கு விஜயம் செய்து மறியல் போரட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களை சந்தித்துப் பேசியுள்ளார்.

அத்துடன் திருமலையில் உள்ள பத்திரிகையாளர்களையும்பொதுமக்களையும் நேரில் சந்தித்து மக்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை திருமலையில் உள்ள அனாதை இல்லங்களுக்கும் சென்று அங்குள்ள நிலவரம் பற்றி கேட்டறிந்து கொண்டனர். (வ)

## இராணுவத்திற்கு

ணுவமுகாமிலும் சென்று சேரலாமெனபாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவத்திற்குஆட்சேர்ப்புத் தொடர்பாக தொலைக்காட்சிகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது.

15 ஆயிரம் பேரைத் திரட்ட இராணுவம் முடிவு செய்திருந்த போதும் கடந்த மாதம் ஆயிரத்து அறுபத்திரண்டு பேர்மட்டுமே இராணுவத்தில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

**ஸ்ரீசெல்வா**
(யாழ்ப்பாணம்)
பிரபு, வையேந்தி
ராதாரவி
நடிப்பில்
**வண்ணத் தமிழ்ப் பாட்டு**
CDபிரதி புதிய வெளியீடு
10.30,2.30 (ப·நேரம்)
[கி-688]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.